FA1E

Register No. | | | | | | | | |

4975-21

(For the candidates admitted from 2017-2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five - year Regular Course)

First Year / First Semester

**LAW OF TORTS**

Time : 2½ hours

Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.**

1. "When the sufferer is willing, no injury is caused". Explain this with the origin, development, essentials and exceptions to the maxim 'volenti non fit injuria'.
"ஒருவர் தனது விருப்பத்தின் பேரில் தீங்குக்கு ஆளானால் எந்தத்தீங்கும் ஏற்படவில்லை என்றே கூறலாம்" 'இசைந்தேற்பது தீங்காகாது' என்ற கூற்றின் தோற்றம் வளர்ச்சி, முக்கியக் கூறுகள், விதிவிலக்குகள் பற்றிக் கூறுக.

2. 'Facts of defamation' is more important than the intention of the defamer'– Examine this statement with leading cases.
'அவதூறு செய்பவரின் உள்நோக்கத்தைவிட அவதூறின் பொருண்மையே மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது' – இக்கூற்றினை ஆராய்ந்து முக்கிய வழக்குகளை குறிப்பிட்டு எழுதவும்.

3. Discuss the various modes by which a tort is discharged.
ஒரு தீங்கு முடிவுக்கு வரும் பல்வேறு வழிமுறைகளை ஆராய்க.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.**

4. All persons can sue and be sued. Discuss the exceptions to this rule.
"யாரும் வழக்கிடலாம்; யார் மீதும் வழக்கிடலாம்" – இதன் விதிவிலக்குகளை விவாதிக்கவும்.

5. 'Master is liable for all the activities of his servants while he is in the course of employment. State exceptions if any to this rule.
'பணியாள் பணித்தலைவருக்காகப் பணியிலிருந்து செய்யும் அனைத்து செயல்களுக்கும் பணித்தலைவரே பொறுப்பாவார்'- இக்கூற்றுக்கு விதி விலக்கு ஏதேனுமிருப்பின் அதனைக் கூறுக.

6. Write about the judicial and extra– judicial remedies available and in law of torts.
தீங்கியல் சட்டத்தில் நீதிமன்றத்தால் மற்றும் நீதி மன்றத்திற்கு வெளியே அளிக்கப்படும் தீர்வழிகள் யாவை?

**PART C**— (5× 4= 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Assault
தாக்க முனைதல்

(b) Nervous shock
நரம்பு மண்டல அதிர்ச்சி

https://www.tndaluonline.com

(c) Trespass ab initio
அடிமுதல் அத்துமீறல்

(d) Foreign torts
அயலகத்தீங்கு

(e) Act of God
கடவுளின் செயல்

(f) Rights of unborn child
பிறவாக் குழந்தையின் உரிமைகள்

(g) Public Liability (Insurance) Act 1991
பொது பொறுப்புநிலை (காப்பீட்டு) சட்டம் 1991

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases give cogent reasons.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

8. Some military jawans found some firewood lying by the river side and carried the same away for the purpose of camp fire and fuel. The firewood belonged to the plaintiff. The plaintiff brought an action against the Government of India. Whether the Government of India is liable?
சில இராணுவ வீரர்கள் ஆற்றோரமாக இருந்த விறகுக் கட்டைகளைக் கண்டனர். அவற்றை வெப்பமூட்டுவதற்கும் மற்றும் எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கும் எடுத்துச் சென்றனர். அவ்விறகுக் கட்டைகள் வாதிக்குச் சொந்தமானவை. எனவே, வாதி இந்திய அரசு மீது வழக்குத் தொடர்ந்தார். இந்திய அரசு பொறுப்பாகுமா?

9. 'A', threw a cup of water on 'B's face by way of practical joke 'B' sued 'A' for the tort of battery. 'A' defended his action that since there was no force that it was only for fun, he was not liable. Decide. https://www.tndaluonline.com
'A' என்பவர் விடையாட்டாக 'B' என்பவரது முகத்தில் ஒரு குவளைத் தண்ணீரை வீசினார். தன்னைத்தாக்கியதாக 'A' மீது 'B' வழக்கிட்டார். தான் வலிமையைப் பயன்படுத்தவில்லை என்றும் விளையாட்டாக ஊற்றியதாகவும் வழக்கினை 'A' மறுத்தார் - தீர்மானிக்கவும்.

10. 'A' was running a Grammar School. Lot of students got admitted and the school became famous. One day 'B' opened a Grammar school very near to that of 'A's school and reduced the fee also to a considerable extent. Many students left 'A's school and joined in 'B's school. 'A' sued 'B' for damages Advise 'A'.
'A' என்பவர் ஒரு இலக்கணப் பள்ளியை நடத்தி வந்தார். அநேக மாணவர்கள் பயின்றனர். பள்ளியும் பிரபலமாகியது. ஒரு நாளில் 'B' என்பவர் 'A'-யின் பள்ளிக்கு மிக அருகிலேயே தனது இலக்கணப் பள்ளியை ஆரம்பித்து கட்டணங்களை கணிசமாகக் குறைத்து அறிவித்தார். அநேக மாணவர்கள் 'B'யின் பள்ளிக்கு மாறினார். 'A', 'B' -யின் மீது நஷ்ட ஈடு கோரி வழக்கிட்டார். 'A' க்கு ஆலோசனை கூறவும்.

————————


https://www.tndaluonline.com